சார்பு நீதிமன்றம், ஓமலூர், சேலம் மாவட்டம்
முன்னிலை: திருமதி.T.மாலதி, B.Sc.,B.L.,
சார்பு நீதிபதி, ஓமலூர்
2025 ஆம் ஆண்டு ஆகஸ்ட் திங்கள் 08 ஆம் நாள் வெள்ளிக்கிழமை

இ.ம.எண்.4/2025 in
அசல் வழக்கு எண்.676/2018
&
இ.ம.எண்.5/2025 in
அசல் வழக்கு எண்.676/2018

இ.ம.எண்.4/2025 in
அசல் வழக்கு எண்.676/2018 மனுவின் தரப்பினர்கள்

1. ராஜகுமாரி
2. முருகேசன் ...மனுதாரர்கள்/வாதிகள்

**//எதிராக//**

1. கிருஷ்ணன்
2. The Branch Manager,
   H.D.B. Financial Services Ltd.,
   Gugai Branch, Salem
3. விஸ்வநாதன் ...எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள்

இ.ம.எண்.5/2025 in
அசல் வழக்கு எண்.676/2018 மனுவின் தரப்பினர்கள்

1. ராஜகுமாரி
2. முருகேசன் ...மனுதாரர்கள்/வாதிகள்

**//எதிராக//**

1. கிருஷ்ணன்
2. The Branch Manager,
   H.D.B. Financial Services Ltd.,
   Gugai Branch, Salem
3. விஸ்வநாதன் ... எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள்

இந்த இரண்டு மனுக்களும் என் முன்னர் 29.07.2025 அன்று இறுதியான விசாரணைக்கு வந்த போது இரண்டு மனுக்களிலும் மனுதாரர்கள்/வாதிகள் தரப்பில் வழக்கறிஞர் திரு.B.சிவராம், B.Sc.,B.L., அவர்கள் முன்னிலையாகியும் , எதிர்மனுதாரர்கள்/ பிரதிவாதிகள் அழைத்தும் ஆஜராகாததால் அவர்களுக்கு எதிராக ஒருதலை பட்ச உத்தரவு பிறப்பிக்கப்பட்டும் மனுதாரர்கள் தரப்பு வாதுரைகள் கேட்டும் , ஆவணங்களை பரிசீலித்தும், இந்நீதிமன்றம் பிறப்பிக்கும் .

**<u>பொதுவான உத்தரவு</u>**

**<u>இ.ம.எண்.4/2025</u>**

இம் மனுவானது உரிமையியல் நடைமுறைச்சட்டம் கட்டளை 18 விதி 17 மற்றும் பிரிவு 151–ன் கீழ் தாக்கல் செய்யப்பட்டு, PW1 சாட்சியத்தை மீண்டும் அழைத்து (Re–call) விசாரிக்க அனுமதி வழங்கி உத்தரவிடக் கோரி தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**<u>இ.ம.எண்.5/2025</u>**

இம் மனுவானது உரிமையியல் நடைமுறைச்சட்டம் பிரிவு 151ன் கீழ் தாக்கல் செய்யப்பட்டு, வாதிகள் தரப்பில் PW1 சாட்சியத்தை மீண்டும் அழைத்து விசாரணை செய்வதற்கு இம்மனுவை re–open செய்ய அனுமதி வழங்கி உத்தரவிடக் கோரி தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

1. **<u>மனுதாரர் தாக்கல் செய்துள்ள இ.ம.எண்.4/2025 மற்றும் இ.ம.எண்.5/2025 இரண்டு மனுக்களின் சுருக்கம்</u>**

1ம் மனுதாரரும் 2ம் மனுதாரரும் கணவன் மனைவி ஆவார்கள். மேற்படி அசல் வழக்கில் 1 , 2 வாதிகள் ஆவார்கள். 1ம் மனுதாரர் அவருக்காகவும் , அவரது மனைவியான 2ம் மனுதாரருக்காகவும் இந்த மனுவை தாக்கல் செய்துள்ளார் . தாவா சொத்து விவரத்தில் கண்டுள்ள வாகனங்கள் இரண்டும் இறந்து போன மனுதாரர்களது மகன் ராஜ்குமார் என்பவருக்கு பாத்தியப்பட்டது. அதனை சுவாதீனம் ஒப்படைக்க கோரி எதிர்மனுதாரர்களுக்கு எதிராக தாவா தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றும் , வழக்கு நிலுவையில் உள்ள சமயத்தில் 3ம் பிரதிவாதி வழக்கிடை சொத்தில் உள்ள டிப்பர் லாரி TN 30 AW 1569 என்ற வாகனத்தை இறந்து போன மனுதாரர்களது மகன் விற்பனை செய்ததாக ஆவண மோசடியில் ஈடுபட்டு மேற்படி வாகனத்தை பெற்றுள்ளது தெரிய வந்ததால் அவரை 3ம் பிரதிவாதியாக சேர்க்கப்பட்டு வழக்குரை திருத்தப்பட்டது

என்றும், எனவே அதன் அடிப்படையில் மனுதாரர்களது தரப்பில் தாங்கள் சாட்சியம் அளிக்க வேண்டியுள்ளதால் PW1 சாட்சியத்தை மீண்டும் அழைத்து (Re–call) விசாரணை செய்யவும் மேற்படி PW1 சாட்சியத்தை மீண்டும் திறக்க (Re–opoen) உத்தரவு செய்ய வேண்டி இந்த மனுவை தாக்கல் செய்துள்ளதாக குறிப்பிட்டுள்ளார்.கள்.

2. 1 முதல் 3 பிரதிவாதிகள் அழைத்தும் ஆஜராகாததால் அவர்களுக்கு எதிராக ஒருதலை பட்ச உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

3. இம்மனுவில் தீர்மானிக்கப்பட வேண்டிய பிரச்சனை என்னவென்றால் , மேற்படி இ.ம.எண் 4/2025 மற்றும் இ .ம.எண் 5/2025 இரண்டு மனுக்களும் அனுமதிக்கத்தக்கதா இல்லையா என்பதேயாகும்.

<u>4. பிரச்சனைக்கான தீர்வு:–</u>

மனு மற்றும் ஆவணங்கள் பரிசீலிக்கப்பட்டதில் மேற்படி அசல் வழக்கானது எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகளுக்கு எதிராக நிரந்தர தடையுறுத்துக் கட்டளை பரிகாரம் மற்றும் சுவாதீன ஒப்படைவு பரிகாரம் கோரி தாக்கல் செய்யப்பட்டுள்ளது ., மேற்படி வழக்கு விசாரணை நிலுவையில் உள்ள சமயத்தில் 3ம் பிரதிவாதி வழக்கிடை சொத்தில் உள்ள டிப்பர் லாரி TN 30 AW 1569 என்ற வாகனத்தை இறந்து போன மனுதாரர்களது மகன் விற்பனை செய்ததாக ஆவண மோசடியில் ஈடுபட்டு மேற்படி வாகனத்தை பெற்றுள்ளது தெரிய வந்ததால் அவரை 3ம் பிரதிவாதியாக சேர்க்கப்பட்டு வழக்குரை திருத்தப்பட்டது என்றும் , எனவே அதன் அடிப்படையில் தாங்கள் சாட்சியம் அளிக்க வேண்டியுள்ளதால் PW1 சாட்சியத்தை மீண்டும் அழைத்து (Re–call) விசாரணை செய்யவும் மேற்படி PW1 சாட்சியத்தை மீண்டும் திறக்க (Re–opoen) உத்தரவு செய்ய வேண்டி மேற்படி இரண்டு மனுக்களையும் தாக்கல் செய்திருக்கிறார்கள் என்பது ஆவணங்கள் மூலம் தெரிய வருகிறது . மேலும் 1 முதல் 3 எதிர்மனுதாரர்கள்/ பிரதிவாதிகள் அழைத்தும் ஆஜராகாததால் அவர்களுக்கு எதிராக அசல் வழக்கில் ஒருதலை பட்ச உத்தரவு பிறப்பிக்கப்பட்டு மேற்படி அசல் வழக்கானது வாதுரைக்காக வாய்தா போடப்பட்டுள்ள நிலையில் மேற்படி இரண்டு மனுக்களும் தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்பதை அறிய முடிகிறது . எனவே மனுதாரர்கள் /வாதிகளுக்கு அவர்களது கட்சியை நிரூபணம் செய்வதற்கு வாய்ப்பு வழங்கவேண்டியது நீதியின்பால் அவசியமாகும், எனவே எதிர்மனுதாரர்கள் /பிரதிவாதிகள் PW1 சாட்சியத்தை மீண்டும்

அழைத்து விசாரணை செய்வதற்கு மனுதாரர்கள் /வாதிகள் தரப்பு சாட்சியத்தை மறுதிறவு செய்து வா.சா.1 ஐ மீண்டும் அழைத்து விசாரணை செய்ய அனுமதிக்கலாம் என்று இம்மனு பிரச்சினைக்கு தீர்வு அளிக்கப்படுகிறது.

**இ.ம.எண்.4/2025 இன் அசல் வழக்கு எண். 676/2018**

முடிவாக, இம்மனு அனுமதிக்கப்படுகிறது. செலவு தொகை இல்லை.

**இ.ம.எண்.5/2025 இன் அசல் வழக்கு எண். 676/2018**

முடிவாக, இம்மனு அனுமதிக்கப்படுகிறது. செலவு தொகை இல்லை.

இந்த உத்திரவு என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு நேரடியாக சொல்லப்பட்டு, அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு , என்னால் பிழைநீக்கம் செய்யப்பட்டு 2025 ஆம் ஆண்டு ஆகஸ்ட் திங்கள் 08 ம் நாளாகிய இன்று இத்திறந்த நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

ஒம்/−T/மாலதி,
சார்பு நீதிபதி,
ஓமலூர்

இரு தரப்பு சாட்சியங்கள் மற்றும் சான்றாவணங்கள் – இல்லை

ஒம்/−T/மாலதி,
சார்பு நீதிபதி,
ஓமலூர்